[4th August 1966

திரு. ஜே. மாதா கவுடர் : எல்லாச் சர்க்கார் ஊழியர்களுக்கும் கிராக்கிப்படி கொடுக்கும்போது அரிஜன இலாக்காவில் பணியாற்றுகிற டெபுடி சேவக்குகளுக்கு மட்டும் கிராக்கிப்படி இல்லை, பிரயாணப்படி இல்லை என்று இல்லை இல்லை என்று சொல்லக் காரணம் என்ன ? விலைவாசி உயர்வு அவர்களை மட்டும் பாதிக்க வில்லையா ? ஆகவே உடனடியாக அவர்களுக்கும் கிராக்கிப்படி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் சேவா உணர்ச்சியின் அடிப் படையில் வந்துள்ளவர்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்கள் அரசாங்கத்தின் முழு நேர ஊழியர்களா ? அவர்களுக்கு மற்ற அரசாங்க ஊழியர் களுக்கு உள்ளதைப் போல ஒழுங்கு முறை விதிகள் பொருந்துமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் அரசாங்க முழு நேர ஊழியர்கள்தான். அவர்களும் அரசாங்க ஊழியர்களின் ஒழுங்கு முறை விதிகள் பொருந்தும்.

ஊத்தங்கரையில் அரிசன மாணவர்களுக்கு விடுதி

* 74 கேள்வி—திரு. ம. கமலநாதன் : கனம் உள்துறை அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊத்தங்கரையில் அரிசன மாணவர்களுக்கான தங்கும் விடுதி புதிதாகக் கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Reclamation of arid seashore lands*

* 75 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to reclaim arid seashore lands in the State and bring them under cultivation; and

(b) if so, the details thereof ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய கடற்கரை மாவட்டங்களின் கரையோரப் பகுதிகளை ஆராய்வதற் காகத் தனிப் பணியாளர்களை அரசாங்கம் நியமித்துள்ளது. இத் தனிப் பணியாளர்கள், இக் கரையோரப் பகுதிகள் நெடுகிலும் வேளாண்மைக்குப் பயன்படாமல் கிடக்கும் நிலப் பகுதிகளில் மண் வள ஆய்வு உட்பட விரிவான ஆய்வுகள் நடத்தி மேற்படி நிலங்களைச் சாகுபடிக்கேற்றவையாகச் செய்வதற்குரிய தக்க ஒழுங்கு நடவடிக்கைகளுடன் வரை படங்கள், மதிப்பீடுகள் இவற்றையும் தயாரிப்பார்கள்.

4th August 1966]

**திரு. வை. சங்கரன் :** இதனால் எவ்வளவு ஏக்கரா சாகுபடிக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? அவற்றில் என்ன என்ன பயிரிடலாம் என்று யோசிக்கப்படுகிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போதுதான் அங்கே போய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்த பிறகுதான் எதுவும் சொல்ல முடியும்.

*Destruction of flying in Thinnaiyampatti*

*** 76 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—**

(a) whether it is a fact that control measures taken for elimination of flying foxes (a kind of bat) in Thinnaiyampatti village near Keeranur in Tiruchirappalli district had to be suspended due to the sentimental objection of the villagers thereat: and

(b) if so, the details thereof ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை தாலூகா, குண்ணண்டார் கோயில் வட்டாரம், திண்ணைத் திரயம்பட்டி கிராமத்தில் ஐயனார் கோவிலிலுள்ள சில ஆலமரங்களில் வாழும் வௌவால்கள் அனைத்தையும் ஒழிப்பதற்காக புது டில்லி, பயிர்ப் பாதுகாப்பு நெறியாளர் அலுவலகத்தைச் சேர்ந்த வௌவால் ஒழிப்புக்கான தொழில் நுட்ப அதிகாரி ஏற்பாடுகள் செய்தார். ஆனால் அக் கிராமவாசிகள் அவற்றின் ஒழிப்பை எதிர்த்துக் கண்டனம் தெரிவித்தார்கள். வௌவால்களை அறவே ஒழிப்பது அவர்களின் அற உணர்வுக்கு எதிராக உள்ளதாகக் கூறினார்கள். வௌவால்கள் கொல்லப்பட்டால் கிராமத்திலுள்ள சில குழந்தைகள், ஆடு, மாடுகள் முதலியன இறக்க நேரிடும், என்று தாங்கள் நம்புவதாக அவர்கள் தெரிவித்தனர். அவைகள் கொல்லப் படுவதற்கு முன் தங்கள் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக யிருப்பதாகவும் அவர்கள் கூறினர். இவ்வாறு அவர்கள் இதைத் கடுமையாக எதிர்த்ததால் கருதியிருந்த இந்த வௌவால் ஒழிப்பு வேலை நிறுத்தப்பட்டது.

**திரு. சா. கணேசன் :** இந்த வௌவால்களை ஒழிக்க வேண்டு மென்ற முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன? அவற்றினால் பயிர் முதலானவற்றுக்குச் சேதம் வந்ததா? அல்லது மக்களுக்கும், விவசாயிகளுக்கும், தீமைகள் உண்டாயிற்றா? பொதுமக்களுக்கு சுகாதார முறையில் தீமைகள் உண்டாயிற்றா? எந்த எந்தக் காரணங்களை அடிப்படை யாகக் கொண்டு அவற்றை அழிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை. பயிர்களை அழிப்பதாக யாராவது பெட்டிஷன் போட்டிருப் பார்கள். அதன்பேரில் நடவடிக்கை எடுத்திருக்கலாம்.